உயிர்த்தெழுந்த இயேசு கிறிஸ்துவின் வல்லமை ஊழியங்கள்

# கர்த்தரின் பிரசன்னம்



Compiled by
P. Isaac Chandran

உம்முடைய சமுகத்தில் பரிபூரண ஆனந்தமும், உம்முடைய வலதுபாரிசத்தில் நித்தியபேரின்பமும் உண்டு.
சங்கீதம் 16:11

**கர்த்தரின் பிரசன்னம் எப்படிப்பட்டது?**

அந்த மேகத்தினிமித்தம் ஆசாரியர்கள் ஊழியஞ்செய்து நிற்கக்கூடாமற்போயிற்று, கர்த்தருடைய மகிமை தேவனுடைய ஆலயத்தை நிரப்பிற்று.
2 நாளாகமம் 5:14

கர்த்தரின் பிரசன்னத்தினால் பர்வதங்கள் மெழுகுபோல உருகிற்று, சர்வ பூமியினுடைய ஆண்டவரின் பிரசன்னத்தினாலேயே உருகிப்போயிற்று.
சங்கீதம் 97:5

அவர் சமுகத்தில் பர்வதங்கள் அதிர்ந்து மலைகள் கரைந்து போகும். அவர் பிரசன்னத்தினால் பூமியும் பூச்சக்கரமும் அதில் குடியிருக்கிற அனைவரோடும் எடுபட்டுப்போம்.
நாகூம் 1:5

அப்பொழுது ஒரு மேகம் ஆசரிப்புக்கூடாரத்தை மூடினது. கர்த்தருடைய மகிமை வாசஸ்தலத்தை நிரப்பிற்று.
யாத்திராகமம் 40:34

**அவர் சமுகத்தில் என்ன பெற்றுக்கொள்கிறோம் ?**

ஜீவமார்க்கங்களை எனக்குத் தெரியப்படுத்தினீர். உம்முடைய சந்நிதானத்திலே என்னைச் சந்தோஷத்தினால் நிரப்புவீர்
அப்போஸ்தலர் 2:28

வழுவாதபடி உங்களைக் காக்கவும், தமது மகிமையுள்ள சந்நிதானத்திலே மிகுந்த மகிழ்ச்சியோடே உங்களை மாசற்றவர்களாய் நிறுத்தவும் வல்லமையுள்ளவர்
யூதா 1:24

**தேவசமுகத்தில் எப்படி இருக்கக்கூடாது?**

தேவசமுகத்தில் நீ துணிகரமாய் உன் வாயினால் பேசாமலும், மனம்பதறி ஒரு வார்த்தையையும் சொல்லாமலும் இரு, தேவன் வானத்திலிருக்கிறார், நீ பூமியிலிருக்கிறாய், ஆதலால் உன் வார்த்தைகள் சுருக்கமாயிருப்பதாக.
பிரசங்கி 5:2

பின்பு ஆரோனின் குமாரராகிய நாதாபும் அபியூவும் தன்தன் தூபகலசத்தை எடுத்து, அவைகளில் அக்கினியையும் அதின்மேல் தூபவர்க்கத்தையும் போட்டு, கர்த்தர் தங்களுக்குக் கட்டளையிடாத அந்நிய அக்கினியை அவருடைய சந்நிதியில் கொண்டுவந்தார்கள்.

அப்பொழுது அக்கினி கர்த்தருடைய சந்நிதியிலிருந்து புறப்பட்டு, அவர்களைப் பட்சித்தது, அவர்கள் கர்த்தருடைய சந்நிதியில் செத்தார்கள்.
லேவியராகமம் 10:1,2

**கர்த்தருடைய பிரசன்னத்தில் எப்படி இருக்கவேண்டும்?**

கர்த்தரிடத்தில் ஒன்றை நான் கேட்டேன், அதையே நாடுவேன், நான் கர்த்தருடைய மகிமையைப் பார்க்கும்படியாகவும், அவருடைய ஆலயத்தில் ஆராய்ச்சிசெய்யும்படியாகவும், நான் என் ஜீவனுள்ள நாளெல்லாம் கர்த்தருடைய ஆலயத்தில் தங்கியிருப்பதையே நாடுவேன்.
சங்கீதம் 27:4

எனக்கோ, தேவனை அண்டிக்கொண்டிருப்பதே நலம், நான் உமது கிரியைகளையெல்லாம் சொல்லிவரும்படி கர்த்தராகிய ஆண்டவர்மேல் என் நம்பிக்கையை வைத்திருக்கிறேன்.
சங்கீதம் 73:28

தாவீது கர்த்தருக்கு விரோதமாக பாவம் செய்தபோது, கர்த்தரை நோக்கி ஏறெடுத்த ஜெபம் சங்கீதம் 51:11ல் வாசிக்கிறோம்

உமது சமுகத்தை விட்டு என்னைத் தள்ளாமலும், உமது பரிசுத்த ஆவியை என்னிடத்திலிருந்து எடுத்துக்கொள்ளாமலும் இரும்.

மோசே கர்த்தரை நோக்கி ஒரு விண்ணப்பம் வைக்கிறார்
அதை யாத்திராகமம் 33:15ல் வாசிக்கிறோம்.

உம்முடைய சமுகம் என்னோடே கூடச் செல்லாமற்போனால், எங்களை இவ்விடத்திலிருந்து கொண்டுபோகாதிரும்.

ஆம்! கர்த்தருடைய சமுகத்தில் பரிபூரண ஆனந்தம் உண்டு. ஆலயப்பிரகாரங்களில் கர்த்தருடைய மகிமையைப் பார்க்கும்படி செல்வோம்

******************